அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



அ.எண் :106/2017

தேதி : 30/09/2017

**தமிழ்நாட்டின் புதிய ஆளுநராக**
**மாண்புமிகு பன்வாரிலால் புரோஹித் நியமனம்**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத்தலைவர் ஆர்.சரத்குமார் வாழ்த்து.**

தமிழ்நாட்டின் புதிய ஆளுநராக பன்வாரிலால் புரோஹித் அவர்களை குடியரசு தலைவர் அவர்கள் நியமனம் செய்து அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. கடந்த ஓராண்டுக்கும் மேலாக, பொறுப்பு ஆளுநராக வித்யாசாகர் ராவ் அவர்கள் செயல்பட்டு வந்த நிலையில், தமிழகத்தில் நிலவி வரும் அசாதாரண அரசியல் சூழ்நிலை காரணமாக நிரந்தர ஆளுநர் தேவை என்பதை அனைத்து அரசியல் கட்சிகளும் வலியுறுத்தி வந்தன. சமத்துவ மக்கள் கட்சி சார்பில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் உடல் நலம் குன்றியிருந்தபோதே, நிரந்தர ஆளுநர் தேவை என்பதை வலியுறுத்தியிருந்தேன்.

தற்சமயம், நிரந்தர ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கும் பன்வாரிலால் புரோஹித் அவர்களுக்கு சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் வரவேற்பையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். முக்கியத்துவமும், சவால்களும் நிறைந்த தற்போதைய காலகட்டத்தில், ஏற்கனவே ஆளுநராகப் பணியாற்றிய அனுபவமும், அரசியல் அனுபவமும் கொண்டு அவரது பணி செம்மையாக அமையவேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத்தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com